பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 18 சனிக்கிழமை 03.08.2024 கதிர் 269

## ஜனாதிபதித் தேர்தலில் 14 பேர் போட்டி

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இதுவரை 14 வேட்பாளர்கள் கட்டுப் பணம்செலுத்தியுள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 8 வேட்பாளர்களும், வேறு அரசியல்கட்சிகள்சார்பில் போட்டியிட ஒருவரும், சுயேச்சையாக போட்டியிட 5 வேட்பாளர்களும் இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தல் எதிர்வரும் 14 ஆம்திகதிநண்பகல்வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ள நிலையில் நேற்று வியாழக்கிழமை வரையான காலப்பகுதியில் மாத்திரம் 14 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடுவதற்கு ஓசல ஹேரத்தும், இலங்கை தொழிலாளர்கட்சிசார்பில் ஏ.எஸ்.பி.லியனகேவும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாசவும், தேசிய அபிவிருத்தி ☞8

## இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டை பாதுகாக்க ராணுவ உதவி வழங்க தயார்

### சீனா அதிரடி அறிவிப்பு

இலங்கை தனது இறைமைஆள்புலஒருமைப் பாட்டினை பாதுகாப்பதற்கு இராணுவ ரீதியிலான உதவிகளை வழங்க தயாரென இலங்கைக்கான சீனதூதுவர்கிசென்ஹொங் தெரிவித்துள்ளார்.

கொழும்பில்நடைபெற்ற நிகழ்வொன்றில்உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை இராணுவத்திற்குத் தொடர்ந்தும் பயிற்சிகளைவழங்குவதற்கு சீனா தயாராகவுள்ளது எங்கள் இரு நாடுகளினதும் இராணுவத்தினருக்கு இடையிலான உறவுகள் காலத்தால் சோதிக்கப் பட்டவை.

இலங்கை மரபுசார் மரபுசாராதஅச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றது. இலங்கையின் இறைமை ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றை பாதுகாப்பதற்கு இலங்கையின் ஆயுதப் படையினருக்கும் மக்களுக்கும்சீனமக்களும்இராணுவத்தினரும்உறுதியான ஆதரவை வழங்குவார்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், உயர்மட்ட வருகைகள், உபகரண ஒத்துழைப்பு,பணியாளர்கள், பயிற்சி மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற துறைகளில் நமது இரு ஆயுதப் படைகளுக்கும் இடையிலான பரிமாற்றங்களும் ஒத்துழைப்பும்ஆழமடைந்து வருகின்றன.

8பில்லியன்ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான பல்வேறு வகையான தொடர்பாடல் மற்றும் ☞8

## இது ரகசியம் அல்ல!

மாகாண சபைகள் தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான விவகாரம் முதற்கோணல் என்கிற நிலையில் தொடங்கியிருக்கிறது. பல ஆண்டுகளாகத் தூங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் தனிநபர்பிரேரணையை,ஜனாதிபதித் தேர்தலையொட்டி தூசு தட்டி எடுத்து ஒகஸ்ட் 22, 23 திகதிகளில் விவாதிக்க ரணில் இணக்கம் தெரிவித்திருந்தார். வியாழக்கிழமை சுமந்திரனைச் சந்தித்த அவர் இந்த உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

சுடலை ஞானம் போன்று அவருக்குத் திடீரென சுமந்திரனின் பிரேரணை ஞாபகத்திற்கு வந்த-து ஒருபுறம் என்றால், அதனைச் 'சுடுகுது மடியைப் பிடி' என்கிற அவசரத்தில் நிறைவேற்றுவதாகக் காட்டும் தேவையும் மறுபுறம் இருந்தது. அப்படிச் செய்வதன் மூலம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதிலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலும் ரணில் விக்கிரமசிங்க இதயசுத்தியுடன் நடக்கிறார் என்று தமிழ்மக்கள்நம்பவேண்டும்என்பது அவரது எதிர்ப்பார்ப்பு.

தமிழ் மக்களுக்கு ☞2

## சிங்களவர்களுக்கு முக்கியத்துவம் அனைத்து மக்களுக்கும் சமத்துவம்

### தீர்வு குறித்து ரணில் யாழ்ப்பாணத்தில் கருத்து



சிங்கள, தமிழ் இனப்பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணவேண்டும். சிங்கள, பௌத்த மக்கள்முக்கியஇடம்இருந்தாலும், அனைவரையும்சமமாகநடத்துவது மிகவும் அவசியம் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். இதில் இன மற்றும் மத ☞2

## மகிந்தவை மாற்றிவிட்டனர்; அமைச்சர் காஞ்சன கவலை

மகிந்தராஜபக்சரணிலைஆதரிக்கும் முடிவில்தான் இருந்தார், அவரைத் தவறாக வழிநடத்திவிட்டனர் என மின்சாரத்துறை மற்றும் சக்தி வலு அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இனைதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது ஜன பெரமுனவின் வேட்பாளரைக் களமிறக்குவதாக எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஏற்கப் போவதில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டில் தான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இருந்தார். இருப்பினும் ஒரு தரப்பினர் அவரை தவறாக வழிநடத்தியுள்ளனர்.

பொது ஜன பெரமுனவின் நிறைவேற்று குழுவில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் யோசனை ஏதும் ☞2

## நியாயமான வரிக் கொள்கைத் திட்டம் நாணய நிதியத்திடம் விளக்கிய சஜித்

தான் ஆட்சிக்கு வந்ததும் சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு, நியாயமான வரிக் கொள்கைஎன்றுசர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில்தற்போதைய வரி நடைமுறை நியாயமற்றது என தெரிவித்துள்ள சஜித்பிரேமதாச தேவைக்கு அதிகமான விதத்தில் வரிகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வரி என்பது முக்கியமானது ☞2

## இ- விஸா வழங்கலை தனியார் மயப்படுத்தும் அமைச்சரவையின் முடிவுக்கு நீதிமன்றம் இடைக்கால தடை

வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வருவதற்கான மின்னியல் விஸா வழங்கும் அனுமதியை தனியார் நிறுவனத்திற்கு வழங்க அமைச்சரவை எடுத்த தீர்மானத்தின் மீது உயர் நீதிமன்றம்இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ரவூப் ஹக்கீம்உள்ளிட்டவர்கள் தாக்கல்செய்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டஉயர்நீதிமன்றம் நேற்றுஇந்தஉத்தரவைப் பிறப்பித்துள்ளது.

விமான நிலையங்களில் நடைமுறைப் படுத் தப்படவள்ள மின்னியல் விஸா (இ-விசா) நடைமுறையினால் நாட்டின் தேசியப் பாதுகாப்பு தொடர்பான முக்கியமான தகவல்கள் கசியும் அபாயம் உள்ளதால் அதனை இரத்துச் செய்யும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இ - -விசா முறைமையில் தற்போது நடைமுறையில் உள்ள முறைமையை மாற்றி வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து சேவையைப் ☞2

## அமெ. – இலங்கை – மாலைதீவு இணைந்து ராணுவப் பயிற்சி

இயற்கைபேரிடர்கள் மற்றும் மனிதாகளால் உருவாக்கப்படும் பேரழிவுகரமானநிகழ்வுகளை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்கள் மற்றும் அவற்றுக்கான பதிலளிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை தரமுயர்த்தும் நோக்குடன்,மொண்டான தேசிய காவலர்கள் (Montana National Guard), அமெரிக்க பசிபிக் விமானப்படை, இலங்கை விமானப் படைமற்றும்மாலைதீவு தேசியபாதுகாப்புப்படை ஆகியன இணைந்து 'அட்லஸ் ஏஞ்சல்' (Atlas Angel) எனும் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியினை மேற்கொள்கின் ☞8

## தாளையடி நிலையம் மூலம் வடக்கில் 40 வீதம் மக்களுக்கு இனிமேல் குடிதண்ணீர் கிட்டும்

### அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு

தாளையடி கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் வடக்கு மாகாணத்தில் 40 வீத மக்களுக்கு குடிதண்ணீர்கிடைக்கும் என்று நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான்,

யாழ்ப்பாணம் - கிளிநொச்சிநீர்வழங்கல் திட்டத்தின் தாளையடி கடல் ☞8

## யாழ்ப்பாண நீர் வழங்கல் விரைவில் தொடங்கப்படும்

### தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்து ஜனாதிபதி ரணில் உரை

யாழ்ப்பாணத்தில் நீர் வழங்கல் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும். யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் திட்டம் மற்றும்'யாழ்.நதி' மூலம் வடக்கின் குடிதண்ணீர் தேவைக்கு முழுமையான தீர்வுகளை வழங்கமுடியும்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் -கிளிநொச்சிநீர்வழங்கல் திட்டத்தின் தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் தாளையடி கடல்நீரைநன்னீராக்கும் நிலையமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை ஆளும்தரப்பின் நிதி ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. ☞2

## ரணில் உண்மையாக இல்லை பெரமுன எம்.பி. குற்றச்சாட்டு

ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். நாடாளுமன்றத்தின் ஊடாக அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம்.இருப்பினும்அவர் எமது கட்சிக்கு உண்மையாக இருக்கவில்லை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக்கருத்து தெரிவிக்கையில்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது,

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரைவேட்பாளராகக் ☞8

## இனி இது .....

நம்பிக்கை ஏற்படும் வகையில் இவற்றையெல்லாம் முதலில் செய்யுங்கள் என்று தமிழர் தரப்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன என்பது உண்மைதான். ஆனால் அவையெல்லாம் ஜனாதிபதித் தேர்தலையொட்டி தமிழ் மக்கள் முன்வைத்த கோரிக்கையல்ல. இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் சமஷ்டியை முன்வைப்பதற்குத் தயார் அல்லது சமஷ்டித் தீர்வு நோக்கிய பேச்சுக்களுக்குத் தயார் என்று தமது தேர்தல் அறிக்கையில் பகிரங்கமாகச் சிங்கள மக்களுக்கு வேட்பாளர்கள் சொல்லவேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் கோரிக்கை.

ஒருவேளை ரணிலைப்போன்ற செப்படி வித்தைக்காரர், ஏமாற்றுப் பேர்வழி அப்படி ஒரு தீர்வை அல்லது தீர்வுக்கான திட்டத்தைத் தனது தேர்தல் அறிக்கையில் முன்வைத்தால் அதனை எப்படி நம்புவது என்கிற கேள்வி எழும்போதுதான், அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்திச்செய்யக்கூடியவற்றை நடைமுறைப்படுத்தி நம்பகத்தன்மையை நிரூபிக்குமாறு தமிழர் தரப்பிலிருந்து கோரப்பட்டது.

அந்தக் கோரிக்கைகள் எல்லாம் ரணிலை ஆதரிக்கமாட்டோம் என்று ராஜபக்சக்கள் அறிவிக்கும்வரை செவிடன் காதில் ஊதிய சங்காகவே ஒலித்து வந்தது. ராஜபக்சக்களின் நிராகரிப்பைத் தொடர்ந்துதான் தமிழர்களின் கோரிக்கை ரணிலுக்குத் திடீரென ஞாபகத்திற்கு வந்துள்ளது. ரணிலைத் தமிழர்களுக்குக் கையாளத் தெரியாமல் இருக்கலாம், ஆனால் ரணில் எப்படியெல்லாம் தமிழர்களை ஏமாற்றுவார் என்பது அவர்களுக்கு அக்குவேறு ஆணிவேறாக நன்கு தெரியும். ஏனெனில் கடந்த மூன்று தசாப்தங்களாக அவரிடம் பாடம் கற்றிருக்கிறார்கள் தமிழர்கள்.

இந்த நிலையில்தான் மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டப் பிரேரணை மீதான விவாதத்தை எப்போது நடத்துவது என்ற விவகாரம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று ஆராயப்பட்டது. ரணிலின் குள்ளநரித்தனம் ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்குப் புரியாதா என்ன, அதனால் ரணில் வாக்குறுதியளித்த ஓகஸ்ட் 22, 23 ஆகிய நாட்களில் விவாதத்தை நடத்த அவர்கள் இணங்கவில்லை. ஏற்கனவே திட்டமிடப்பட்ட இரங்கல் அமர்வுகள் எல்லாம் இருப்பதால் செப்டெம்பர் 6 இந்த விவாதத்தை நடத்தலாம் என்று அவர்கள் நாசூக்காகத் தள்ளிவிட்டார்கள். செப்டெம்பர் 21 ஜனாதிபதித் தேர்தல் அதற்கு இருவாரங்களுக்கு முன்னதாக இந்த விவாதத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு தொலைபேசியில் தகவல் சொன்னார் ரணில். தாளையடி கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்தைத் திறந்துவைப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த ரணில் விக்கிரமசிங்க, உடனடியாகத் தானாகவே அழைப்பெடுத்து சுமந்திரனுக்கு திகதி மாற்றம் குறித்துத் தகவல் தெரிவித்தார். சுமந்திரனின் கோரிக்கைக்கு ஏற்ப விவாதத்திற்குத் திகதி குறிக்கப்பட்டுவிட்டது என்று அவர் தெரிவித்திருக்கிறார். தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்னுமாம் என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்.

..................

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகை தற்போதைக்கு இடம்பெறாது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

20 ஜீன் 2024 இல் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு வந்திருந்தவேளை இந்திய பிரதமரின் வருகை குறித்து சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இந்திய பிரதமரின் பதவியேற்பு நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி கலந்துகொண்டவேளை இது குறித்தும் பேசப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நரேந்திர மோடியின் இலங்கை பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

செப்டம்பர் 21 ம் திகதி தேர்தல் குறித்து கவனம் செலுத்துவதால் இலங்கை ஆளும்தரப்பு சர்வதேச தலைவர்களுடனான ஊடாட்டங்களை மட்டுப்படுத்தியுள்ளது. இந்த தருணத்தில் எந்த வெளிநாட்டு தலைவரையும் உபசரிக்கும் நிலையில் இலங்கை இல்லை என்று வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

மாலைதீவு மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைவர்களினது இலங்கை வருகைகளும் பிற்போடப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிங்களவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்களிடையேயான சமத்துவம் மற்றும் பெண்கள் மற்றும் ஆண்கள் இடையேயான சமத்துவமும் அடங்கும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட கல்வியியலாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்ததாவது:

முதலில் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட அளவில் வரி விதிக்க இணக்கம் காணப்பட்டபோதிலும் அதன் பின்னர் வந்த ஆளும்தரப்பு தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் வரிகளை குறைத்தது. இது அரசின் வருவாய் குறைவதற்கு வழிவகுத்தது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்திலிருந்து விலகி, அந்த தவறை நாம் மீண்டும் செய்ய முடியாது. ஒரு நாடாக நாம் முன்னேறும்போது, நமது அரசியல் முறைமையையும் மாற்ற வேண்டும்.

கடந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டின் பிரதமர் பதவியை ஏற்க எவரும் தயாராக இருக்கவில்லை. நாட்டின் தலைமைப்பொறுப்பை ஏற்கும் திறன்கொண்ட ஒருவரைக் கண்டுபிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. ஜனாதிபதி வெளியேறிய பின்னர், நான் பதவி விலகுவதாகச் சொன்னேன். ஆனால் யாரும் பொறுப்பை ஏற்க விரும்பவில்லை. நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பானது கடன் வாங்குதல் மற்றும் போலி வாக்குறுதிகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பது அப்போது புரிந்தது.

நமது அரசியல் முறைமையைக் கருத்தில் கொண்டு வலுவான தீர்மானங்களை எடுக்கவேண்டும். நல்ல எதிர்காலத்திற்காக நாட்டுக்கு புதிய அரசியல் முறைமையொன்று தேவை. அந்த அரசியல் முறைமையை தலைமைத்துவத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தக்கூடாது. பொறுப்பை ஏற்கக்கூடிய தைரியமான தலைவர்களே நாட்டுக்குத் தேவைப்படுகின்றனர். அத்தோடு இந்த பயணத்தை நாம் அனைவரும் ஒன்றாக செல்ல வேண்டும்.

அத்துடன் சிங்கள, தமிழ் இனப்பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும். பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தாலும், அனைவரையும் சமமாக நடத்துவது மிகவும் அவசியம் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். இதில் இன மற்றும் மத குழுக்களிடையே சமத்துவம் மற்றும் பெண்கள் மற்றும் ஆண்கள் இடையே சமத்துவமும் அடங்கும்.

நாட்டில் ஒரு பாதியாக இருக்கும் பெண்களுக்கு நாடாளுமன்றத்தில் சரியான பிரதிநிதித்துவம் இல்லை. இதற்கு நாம் தீர்வு காண வேண்டும். சிங்கள மொழியையும் தமிழ் மொழியையும் நாம் ஊக்குவிக்க வேண்டும். எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் ஏற்படப்போகும் பொருளாதார வளர்ச்சியால் தமிழ் பேசும் இலங்கையர்களுக்கு மற்றவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்புகள் கிடைக்கும்.

நாட்டின் அனைத்து மாகாணங்களையும் ஒன்றாக அபிவிருத்தி செய்யவேண்டும். நான் அமைச்சராக இருந்த காலத்தில் நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் இருந்த போதிலும் பின்னர் அது பின்தங்கிப்போனது. இப்போது போர் முடிந்துவிட்டது. எனவே யாழ்ப்பாணத்தையும் வடமாகாணத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய தருணம் வந்துள்ளது.

வறுமை ஒழிப்பு, விவசாய நவீனமயமாக்கல் போன்ற பிராந்திய அபிவிருத்திக்காக மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்க வேண்டும். தேசிய காணி ஆணைக்குழு மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பனவற்றை வர்த்தமானியில் வெளியிட எதிர்பார்க்கின்றோம். பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கும் வகையில் மாகாண சபைத் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்து, மாகாண சபையிலும் நாடாளுமன்றத்திலும் ஒரே நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணியாற்றுவதற்கு இடமளிக்க எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் மத்திய அரசும், மாகாண நிர்வாக பொறிமுறையும் இணைக்கப்படும்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுற்றுலா, விவசாயம் ஆகியவற்றில் யாழ்ப்பாணம் பெரும் திறனை கொண்டுள்ளது. திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்து இந்தியாவுடன் தரைமார்க்க இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் முதலீட்டு வலயங்களை அபிவிருத்தி செய்து நாட்டின் அபிவிருத்திக்கான பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

யாழ்ப்பாணம் மற்றும் வடமாகாண மக்கள் நீண்டகாலமாக நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தனர். ஆனால், இந்த மாகாணத்தில் நாம் பயன்படுத்த வேண்டிய பெரும் வளங்கள் உள்ளன. பழைய முறையில் முன்னேறிச் செல்ல முடியாது. நல்ல எதிர்காலத்திற்காக தற்போதுள்ள முறைமை மாற்றப்பட வேண்டும். அதற்கு, மருத்துவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சிவில் சமூகத்தலைவர்கள் என்ற வகையில் நீங்கள் முன்னோடியாவிருந்து பங்களிப்பை வழங்க வேண்டும்.

புதிய இலங்கைக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். 2022 ஆம் ஆண்டில் நாங்கள் எதிர்கொண்ட சிரமங்கள் கடுமையானவை. இருந்தாலும், நாம் அதை உறுதியுடன் எதிர்கொண்டோம். நமது நாட்டை முன்னேற்றும் சவாலை வெல்வோம். அனைவரும் ஒன்றுபட்டு புதிய பயணத்தை தொடர்வோம் என்று அழைப்பு விடுக்கிறேன் என்றார்.

## இலங்கையின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாத எதிர்ப்பு உபகரணங்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வருடமும் அனைத்துத் தரத்திலான அதிகாரிகள் மற்றும் பல்வேறு வகையான துருப்புக்களுக்கு இடைவிடாத பயிற்சிகளை வழங்குவதன் மூலம் இலங்கை ஆயுதப் படைகளின் பாதுகாப்பு திறன்களை மேம்படுத்துவதில் சீன மக்கள் இராணுவம் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. எதிர்காலத்தில், இலங்கையின் இராணுவத்தை எங்களால் இயன்றவரை மேம்படுத்துவதற்கு நாங்கள் தொடர்ந்து உதவுவோம் என்றார்.

## நியாயமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என தெரிவித்துள்ள எதிர்கட்சி தலைவர் நாட்டின் வரி சேகரிப்பு முறையை திறமையானதாக வெளிப்படைதன்மை மிக்கதாக மாற்றுவதன் மூலம் ஆளும்தரப்பின் வருமானத்தை அதிகரிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

பலர் வரிவலையில் சிக்காமல் தப்பிப்பது குறித்தும் வரி சூத்திரத்தில் தெளிவான நேர்மறையான மாற்றம் ஏற்படும் என்றும் உறுதியளித்துள்ளதாக கூறியுள்ள பிரேமதாச, தொழில் வல்லுநர்கள், சம்பளம் பெறும் ஊழியர்கள் மற்றும் சாதாரண மக்களுக்கு நியாயமான வரி சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதாக உறுதியளித்தார்.

## சு.கவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்படவில்லை. மாறாக உதயங்க வீரதுங்கவின் யோசனை முன்வைக்கப்பட்டு, முறையற்ற வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நிறைவேற்றுச் சபையில் பொது ஜன பெரமுன எடுத்த தீர்மானத்தை இரத்து செய்யவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவும் மாத்தறை மாவட்ட பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகப் பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிடுவது நகைப்புக்குரியது. கட்சி பிளவடைந்துள்ளமைக்கான பொறுப்பை இவர் ஏற்க வேண்டும். 2021ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவரது முறையற்ற செயற்பாடுகளினால் கட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சிரேஷ்ட தரப்பினர்கள் கட்சியைவிட்டு வெளியேறினார்கள்.

பொது ஜன பெரமுனவைப் பாதுகாக்க வேண்டுமாயின் சாகர காரியவசத்தை பதவிநீக்கவேண்டும். அமைச்சர் ரமேஷ் பதிரனவை கட்சியின் பொதுச்செயலாளராக நியமிக்கும் யோசனையைக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் முன்வைப்பேன் என்றார்.

## அமைச்சரவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவதற்கு அமைச்சரவை தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளமையால் சுற்றுலாத்துறை அபாய நிலையை எதிர்நோக்கியுள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், விசா கட்டணங்கள் உயர்வடையும் என்பதோடு மக்கள் அரசு மீது கொண்டிருக்கும் நம்பிக்கை வீழ்ச்சி அடையும் என்றும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மனுக்களின் பிரதிவாதிகளாக பிரதமர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், சுற்றுலா அமைச்சர், நீதி அமைச்சர், சட்டமா அதிபர், குடிவரவு, குடியகல்வு ஆணையாளர் உட்பட 32 தரப்பினர் பெயரிடப்பட்டுள்ளனர். இந்நிலையில் குறித்த மனு மீண்டும் ஒக்டோபர் 4ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## தாளையடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியின் குடிதண்ணீர்த் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக, இலங்கை அரசு 2011 ஆம் ஆண்டில் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பிரான்ஸ் அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் உதவியுடன் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தேசியமட்டத்தில் 2.5 மில்லியன் நீர் இணைப்புகள் காணப்படும் நிலையில் இந்தத் திட்டத்தின் கீழ் மேலும் 60,000 இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையின் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 300,000 மக்களுக்கு சுத்தமான, பாதுகாப்பான குடிதண்ணீரை வழங்குவதும் 80,000 பேருக்கு சுகாதார வசதிகளை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

உப்பு நீக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2017 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கைசாத்திடப்பட்டது. இதுவரை, இருபது உயரமான நீர் தொட்டிகள் அமைத்தல், 186 கி.மீ பரிமாற்ற குழாய்கள் மற்றும் 382 கி.மீ விநியோக குழாய்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

உப்புநீக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான பணிகள் 2021 ஜனவரியில் கையளிக்கப்பட்டன. இத்திட்டத்தின் மொத்தச் செலவு 266 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார பாதுகாப்புத் திட்டம் 2025 ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் முழுமையாக நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்க காணி வழங்கிய மக்களுக்கு நன்றி. தாளையடி பகுதிக்கு தனியானதொரு கிராம சேவகர் பிரிவை நிறுவுமாறு மக்கள் கோரியுள்ளனர். அதனை செய்யுமாறு ஆளுநருக்கு பணிப்புரை விடுப்பேன். இந்த சுத்திகரிப்பு நிலையம் யாழ்ப்பாணத்தின் குடிநீர் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வை வழங்கும்.

எதிர்காலத்தில் வலவ கங்கை நீர்த்திட்டத்தையும் ஆரம்பிப்போம், அதனால் பூநகரிக்கு நீர் கிடைக்கும். அதேபோல் யாழ். நதி நீர் திட்டத்தை ஆரம்பிப்போம். இந்த திட்டங்கள் வந்தால் யாழில் நீர் பிரச்சினை இருக்காது. வடமராட்சி செழிப்பான பிரதேசமாக மாறும்.

இந்த நீருக்கு நாம் கட்டணம் செலுத்தவேண்டும். அதனால் சூரிய சக்தியைப் பயன்படுத்தி கட்டணத்தை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம். இந்த பகுதிக்கு நீர் வழங்கல் முறைகளை செயற்படுத்தி நவீன விவசாயத்தை செயற்படுத்துவோம். நீருக்கு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் ஒவ்வொரு லீட்டரிலும் உச்சபயனை அடையவேண்டும்.

'யாழ் நதி' திட்டத்தின் ஊடாக பொருளாதாரத்தை பலப்படுத்த எதிர்பார்க்கிறோம். காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இந்தியாவுடன் கலந்தாலோசிக்கிறோம். சீமெந்து நிறுவனம் இருந்த இடத்தில் முதலீட்டு வலயமொன்று ஆரம்பிக்கப்படும், பூநகரியிலும் அதனை செய்வோம். பலாலியில் சுற்றுலா துறையை மேம்படுத்துவோம். காற்று, சூரிய சக்தி மூலம் பெருமளவில் இங்கு மின் உற்பத்தி செய்ய முடியும். அதனால் மேலும் பல பொருளாதார நன்மைகள் கிடைக்கும்.

அடுத்த 5 - 10 வருடங்களில் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்றப்படும். அதேநேரம் மத்திய ஆளும்தரப்பு யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்மாண பணிகளை மேற்கொள்ளாமல் இருக்கத் தீர்மானித்துள்ளது. மாகாண சபையினால் அதனைச் செய்யமுடியும். எனவே நாம் அடுத்தபடியாக பொருளாதாரப் போரை எதிர்கொள்ள ஆரம்பிப்போம். அதற்கான பணிகளை நாம் முன்னெடுக்கவேண்டும். வங்குரோத்து நிலையிலும் இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

உத்தியோகபூர்வ கடன் வழங்குனர்கள், சீன எக்ஸிம் வங்கி, பிணைமுறி கடன் வழங்குநர்களுடன் உடன்பாடுகளை எட்டியுள்ளோம். அதனால் வெளிநாட்டுக் கடன்கள் எமக்கு கிடைக்கும். ஜப்பான் அபிவிருத்தி பணிகளை மீள ஆரம்பிப்பதாக உறுதியளித்துள்ளது. மற்றைய நாடுகளுடனும் அந்த இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவோம்.

இந்திய பிரதமர் நரேந்திர

காலைக்கதிர் Kalaikkathir

### இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைதான

# வியாழேந்திரனின் தனிச் செயலர், இணைப்பாளர் இருவருக்கும் ஓகஸ்ட் 15 வரையும் விளக்கமறியல்

மட்டக்களப்பில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் பிரத்தியேகசெயலாளர் மற்றும் அவரது கட்சி இணைப்பாளர் ஆகிய இருவரையும் கொழும்பு நீதிமன்றில் விண்ணப்பிக்குமாறும் ஓகஸ்ட் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிவான் நேற்று (வெள்ளிக்கிழமை) உத்தரவிட்டார்.

மட்டக்களப்பில் ஆற்று மண் அகழ்வதற்கான அனுமதி வழங்க கட்டட ஒப்பந்தகாரர் ஒருவரிடம் 15 இலட்சம் ரூபாய் இலஞ்சம் வாங்கிய இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் செயலாளர் மற்றும் அவரது கட்சி இணைப்பாளர் ஆகிய இருவரை வியாழக்கிழமை கல்லடி கடற்கரையில் மாறுவேடத்தில் இருந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட இருவரையும் பொலன்னறுவை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று விசாரணை மேற்கொண்ட இலஞ்சஊழல் ஆணைக்குழுவினர், கைதான இருவரையும் இன்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து, எதிர்வரும் ஆகஸ்ட் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் இருவரையும் கொழும்பு நீதிமன்றில் விண்ணப்பிக்குமாறும் அவ்விருவரையும் இங்கிருந்து கொழும்பு சிறைச்சாலைக்கு மாற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சிறைச்சாலை மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினருக்கு கட்டளையிட்டு உத்தரவிட்டார். (05)

## கண்டியில் பஸ்ஸிலிருந்து தவறி விழுந்த வயோதிபர் படுகாயம்

தனியார் பஸ் ஒன்றில் பயணித்த வயோதிபர் ஒருவர் கண்டி, போகம்பறை பகுதியில் வைத்து பாதுகாப்பற்ற முறையில் பஸ்ஸிலிருந்து இறங்க முயன்ற போது கீழே தவறி வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

70 வயதுடைய வயோதிபரொருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.(05)

## கஞ்சாப் போதைப்பொருளுடன் அம்பாந்தோட்டையில் நபர் கைது

அம்பாந்தோட்டை, வீரவில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை, வீரவில பகுதியில் வசிக்கும் 36 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 02 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வீரவில பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

## சிகிரியாவில் கரடி தாக்கியதால் இருவர் வைத்தியசாலையில்!



சிகிரிய - இலுக்வல பிரதேசத்தில் கரடி தாக்கியதில் இருவர் காயமடைந்துள்ளனர் என சிகிரிய வனவிலங்கு அலுவலகம் தெரிவித்துள்ளது.

காயமடைந்த இருவரும் தம்புள்ளை மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். காயமடைந்த ஒருவர் தனது வீட்டின் பின்புறம் உள்ள கழிவறைக்கு சென்றபோது கரடியால் தாக்கப்பட்டார்.

மற்றயவர் செடி ஒன்றிற்கு அருகில் வெற்றிலை சாப்பிட்டுக் கொண்டிருந்த போது கரடியால் தாக்கப்பட்டுள்ளார். (05)

## இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

### வவுனியாவில் சம்பவம்: மூவர் படுகாயம்

வவுனியா பட்டாணிச்சூர் வயல்வெளிக்கு அண்மித்த பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னார் வீதியூடாக வவுனியா நகர் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் முன்னால் சென்ற பிறிதொரு வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட சமயத்தில் எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவருகின்றது.

இந்த விபத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05-100)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(தில்சாத் பர்வீஸ்)




க.பொ.த உயர்தரப் பரீட்சை (2023) எழுதிய மாணவர்களுக்கான 3 ஆம் நிலை கல்வியினூடாக தொழில் வழிகாட்டல் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், 3 ஆம் நிலை மற்றும் தொழில்வழிகாட்டல் ஆணைக்குழு ஆகியவற்றின் ஒன்றினணப்புடன் நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட விஷேட தொழிற் பயிற்சிப்பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹாவித்தியாலய தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் எம்.டீ.எம்.ஜனூபர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தினுடைய செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக மாவட்ட ஒருங்கினணப்பாளரும் அம்பாறை மாவட்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.நடனகுமார் மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலகத்தினுடைய திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.எஸ்.ஐ.எ. மௌலானா மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹாவித்தியாலய தேசிய பாடசாலை பிரதி அதிபர்களான எ.ஜவாஹிர் , எம்.வை.லாபிர் யூசுப், எம்.சி.பர்சான் மற்றும் இந் நிகழ்ச்சி திட்டத்திற்கு பொறுப்பான ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவுரையை சம்மாந்துறை பிரதேச செயலகத்தினுடைய திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.எஸ்.ஐ.எ. மௌலானா வழங்கி இருந்தார்.

இந் நிகழ்ச்சி திட்டமானது கடந்த மூன்று மாதங்களாக பாடசாலையில் இடம்பெற்று நிறைவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

## தனிமையில் இருந்த பெண்ணின் மீது தாக்குதல் நடத்திவிட்டுக் கொள்ளை

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, குடத்தனை மேற்கு பகுதியில் தனிமையிலிருந்த பெண்மீது இனந்தெரியாத நபர்கள் வியாழக்கிழமை அதிகாலையில் சரமாரியான தாக்குதல் நடத்தியதுடன் அவரது காதிலிருந்த தோடு மற்றும் பத்தாயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையிட்டுச் சென்றதுடன் அவர்களது காணிகளின் உறுதிப் பத்திரங்களையும் தீயிட்டுக் கொளுத்திய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வியாழக்கிழமை அதிகாலையில் தூங்கிக்கொண்டிருந்தவேளை கதவை உடைத்து முகமூடி அணிந்து உள்ளே நுழைந்த மர்ம நபர்கள் அங்கு குடத்தனை மேற்கில் தனிமையில் தூக்கிக்கொண்டிருந்த 68 வயதுடைய வயோதிப் பெண்மீது தாக்குதல் நடத்தி தங்க தோடு, தாலி ஆகியவற்றை கொள்ளையிட்டதுடன் அவரிடம் இருந்த பத்தாயிரம் ரூபா பணத்தையும் பறித்தெடுத்தது விட்டு, அவர்களது காணிகளின் உறுதி பத்திரங்களையும் கோரியுள்ளனர்.

குறிப்பாக அண்மையில் கொள்வனவு செய்த காணியின் உறுதிப் பத்திரத்தையும் கோரியுள்ளனர். அப்போது அச்சத்தில் அம் முதிய பெண்மணி உறுதிப் பத்திரத்தை காண்பிக்க அதனை தீயிட்டு கொளுத்தியதுடன் அவரது பாவனை உடுபுடைவைகளையும் தீயிட்டு கொளுத்தியுள்ளனர்.

மேலும் குறித்த முதிய பெண்மணி அண்மையில் கொள்வனவு செய்த காணியில் புதிதாக வீடு ஒன்றை நிர்மாணிக்கும் பணிகள் இடம்பெறுவதாகவும், அதற்கான பணம் எங்கே இருக்கிறது என்றும் கேட்டு மிரட்டியுள்ளனர்.

அதற்கு அவர், இருந்த காசில் தான் கற்களை பறித்து வேலை செய்யத்தொடங்கியுள்ளோம் என்றும் கூற பொய் சொல்வதாக கூறி தாக்கியுள்ளனர்.

இதனால் குறித்த முதிய பெண் மயக்கமடைந்த நிலையில் இருந்துள்ளார். புதிதாக கொள்வனவு செய்த காணியில் இரவுக் காவலிற்காக தங்கியிருந்த கணவர் அதிகாலை 5 மணிபோல் தனது வீட்டிற்கு வந்தபோது தனது மனைவி இரத்த காயங்களுடன் கிடந்ததை கண்டு உடனடியாக அயலவர் உதவியுடன் தனது மனைவியை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இலங்கையின் சாபக்கேடு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க வேறுபட்ட கொள்கையை உடையவராக இருந்தபோதும் அவர் ஜனாதிபதியாவதற்கு ஆதரவளித்ததுடன் நாடாளுமன்றத்திலும் அவருக்கு ஆதரவு அளித்து வந்தபோதும் அவர் பொது ஜன பெரமுன கட்சிக்கு உண்மையாக இல்லை என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்அந்தக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே.

”ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெர முனவின் உறுப்பினரை வேட்பாளராகக் களமிறக்கும் தீர்மானம் கட்சி உறுப்பினர்களின் முழுமையான ஆதரவுடன் எடுக்கப்பட்டது. அந்தத் தீர்மானம் இனி மாற்றம் பெறாது.எமது வேட்பாளரே வெற்றி பெறுவார்.

மாறுபட்ட அரசியல் கொள்கையுடைய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். நாடாளுமன்றத்தின் ஊடாக அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம். இருப்பினும் அவர் எமக்கு உண்மையாக இருக்கவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் குறித்து கட்சியின் தலைவர்களுடன் பேச்சு நடத்திக்கொண்டு கட்சி உறுப்பினர்களுடனும் தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்தினார். கட்சியைப் பலவீனப்படுத்தும் வகையில் செயற்பட்டார். பொது ஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்து பயணிக்கும் சூழலை ஜனாதிபதியே இல்லாதொழித்தார்” என்று லொக்குகே தெரிவித்தார்.

ரணிலின் ’நற்குணங்’களுக்குக் கடைசியாகக் கிடைத்துள்ள சான்றிதழ் இது. அவர் யாருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமானவர் இல்லை என்பது இதன் மூலம் நிரூபணமாகியுள்ளது. அரசியல்வாதிகள் சொன்ன சொல்லைக் காப்பாற்றாதவர்கள் என்பது உலகப் பண்பு. அதற்குக் காரணம், அவர்கள் பெரும் இலக்குகளைமுன்வைத்துமெல்லநகர்வார்கள், மக்கள் எதிர்பார்க்கும் வேகத்தில் அவர்களால் தீர்வுகளைப் பெற்றுத்தரமுடியாது என்பதுதான். ஆனால் ரணில் விக்கிரமசிங்க, வாக்குறுதிகளை காற்றில் விடுபவர் மட்டுமல்ல தன்னை நம்பிச் செயற்படுபவர்களையே நட்டாற்றில் கைவிட்டுவிடுவார். பொது மேடைகளில் தனது கொள்கைகளாக வலியுறுத்துபவற்றை உடனடியாகத் தானே தூக்கியெறிவார்.

2015இல் தமிழ்த் தலைவர்களுக்கும் அவர் இதே துரோகத்தைத்தான் செய்தார். அப்போதும் எந்த வெற்றிவாய்ப்பும் இல்லா–து, அரசுத் தலைவர் தேர்தலில் ஒருவேட்பாளராகநிற்பதற்கேதகுதிஇழந்திருந்தரணிலை தலைமை அமைச்சர் [பிரதமர்] என்கிற அதிகாரத்தில் இருத்துப் பாடுபட்ட சம்பந்தன் போன்ற தலைவர்களையே அவர் ஏமாற்றினார். நம்ப வைத்துக் கழுத்தறுத்தார். ரணிலை நம்பித் தனது சொந்த மக்களிடமே அவப் பெயரை வாங்கிக்கட்டிக்கொள்ளும் நிலைக்கு சம்பந்தர் சென்றபோதும், அவரது இறுதிக் காலத்திற்கு முன்னர் தீர்வைக் காண்போம் என்று சொல்லிச் சொல்லியே அவரது சிதைக்குத் தீமூட்டினார் ரணில்.

சம்பந்தரோடு மட்டும் அவரது ஏமாற்றுச் சித்துக்கள் நின்றுவிடவில்லை. அதைத் தாண்டி கடைசியாக அரசியலுக்கு வந்த விக்னேஸ்வரன் வரைக்கும் அது நீண்டது. ஒருவர் விடாமல் எல்லாத் தமிழ்த் தலைவர்களையும் அவர் ஏமாற்றினார். ஒருவருக்குக்கூட அவர் உண்மையாக இருந்ததில்லை. சொந்தக்கட்சியினர், சொந்தக் கூட்டணியினர், தமிழ் முஸ்லிம் கட்சியினர என்று எவருக்கும் அவர் உண்மையாக இருந்ததில்லை. அதைத்தான் இப்போது ராஜபக்சக்களின் தரப்பிலிருந்தும் கூறுகின்றார்கள். யாருக்கும் உண்மையற்ற ஒரு தலைவர் இந்த நாட்டின் சாபக்கேடன்றி, வரமல்ல.

# பைடன். அதிகார ஆசையின் அடையாளம்



**ராமச்சந்திர குஹா**

அமெரிக்காதான், என் தாய் நாட்டைப் போலவே நான்அதிகம்அறிந்தநாடு. முப்பத்தெட்டுஆண்டுகளுக்கு முன்னால் முதல் முறை சென்றேன், அதற்குப் பிறகு பல முறை சென்றிருக்கிறேன். கடைசியாக 2023இன் வசந்த காலத்தில் அங்கிருந்தேன், அப்போது ஜோ பைடன் அதிபராகி இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. மூன்று வாரங்கள் அங்கிருந்தபோது நண்பர்களுடன் உரையாடியது மட்டுமல்லாமல் ஊடகங்கள் வாயிலாகவும் அங்கு நடப்பதைத் தெரிந்துகொண்டேன்.

நாட்டின் அதிபராக ஜோ பைடன் சிறப்பாகச் செயல்பட்டுவந்தார். டொனால்ட் டிரம்ப் அதிபராக இருந்த காலத்தில் மக்களிடையே ஏற்பட்டிருந்த விசப் பிளவை சரிசெய்திருந்தார். வயது மூப்பு, உடல் நிலையில்தளர்வுகாரணமாகஇரண்டாவதுமுறையாக அதிபர் பதவிக்கு அவர் போட்டியிட்டிருக்கவேகூடாது, தனக்குப் பதிலாக இன்னொருவரை வேட்பாளராக கட்சி தேர்ந்தெடுக்க அனுமதித்திருக்க வேண்டும்.

மூப்பு காரணமாக தன்னுடைய உடல், மனநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை அவதானிக்கத் தவறிவிட்டார் பைடன். இரண்டாவது முறை அதிபராகப் போட்டியிட அடம்பிடித்தார். டொனால்ட் டிரம்புடனான தொலைக்காட்சி நேரடி விவாதத்தில்அவருக்குசரியாகஈடுகொடுக்கமுடியாமல் திணறினார். அவர் சார்ந்த ஜனநாயக கட்சியின் நிர்வாகிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், தொண்டர்களுமே, ‘போதும் நீங்கள் போட்டியிட்டது விலகிவிடுங்கள்’ என்று வற்புறுத்தி அழுத்தங்களை அதிகரித்தனர்.

மக்களிடையேயான கருத்துக் கணிப்பில் அவர் செல்வாக்கு வேகமாக சரியத் தொடங்கியது. அப்படியும்கூட மேலும் சில வாரங்களுக்கு, போட்டியிலிருந்து விலக மாட்டேன் என்றே தீவிரம் காட்டினார், கடைசியில் அவருடைய குடும்பத்தினரும் நெருங்கிய நண்பர்களுமே செலுத்திய செல்வாக்கால் வெளியேறச் சம்மதித்தார்.

பதவியில் ஒட்டிக்கொள்ள பைடன் முயன்றது, ஏதோ அவர் மட்டும் செய்த காரியம் அல்ல. மிக உயர்ந்த பதவியில் அதிகாரமும் செல்வாக்கும் பெற்றவர்கள் அனைவருமே, தங்களுடைய உடல் - மனநிலை இடம் தராவிட்டாலும் தங்களுடைய ஆட்சியால் மக்களுக்குத் திருப்தியும் நாட்டுக்கு நன்மையும் இல்லாவிட்டாலும் பதவியைத் துறக்க அவ்வளவு எளிதில் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள்.

அரசு நிர்வாகமும் மக்கள் சமூகமும் எவ்வளவு பாதிப்புஅடைந்தாலும், மக்களிடையேஅவர்களுடைய ஆதரவு மேலும் சரிந்தாலும்கூட பதவியை விட்டு விலக மனம் இடம் தராது.

## கிரிக்கெட்டில் இது வழக்கம்

இந்தியாவில் கிரிக்கெட் ரசிகர்களுக்கு இதில் கசப்பான அனுபவங்கள் நிறைய உண்டு. முப்பத்தைந்து வயதைக் கடந்துவிட்டால் எந்தக் கிரிக்கெட் வீரராலும் தொடக்க காலம்போல் உடலை வில்லாக வளைக்கவோ, ஓடவோ, பந்துகளை வீசவோ - அடிக்கவோ முடியாது. முந்தைய காலம்போல் அவர்களால் ஆட்டத்தில் சோபிக்கவும் முடியாது. மிகச் சிலர்தான் இதைத் தாங்களாகவே உணர்கின்றனர். சுநீல் காவஸ்கர் இதில் விதிவிலக்கு. உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நன்றாக விளையாடிய பிறகு, ஓய்வை அறிவித்தார்.

அவருடைய தங்கைக் கணவரும் அணித் தோழருமான ஜி.ஆர்.விசுவநாத், ஓய்வுபெற்ற காலத்துக்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாக - தானாகவே விலகியிருக்க வேண்டியவர். கபில் தேவ்கூட இதில் காலம் தாழ்த்தினார், சச்சின் டெண்டுல்கரும் அப்படியே. அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தும் சாதனைக்காகவும் அதிக மேட்சுகளில்விளையாடியவர்என்றசாதனைக்காகவும் இருவரும் அப்படித் தொடர்ந்தனர்.

போதும்இந்தப்பொறுப்பு, இளையதலைமுறைக்கு வழிவிடுவோம் என்று முடிவெடுக்காமல் – இன்னும் சில காலம் சில ஆண்டுகள் இப்படியே பதவியில் நீடிப்போம் என்ற ஆசை, அரசியல் - கிரிக்கெட் தவிர பிற துறைகளில் உள்ளவர்களிடமும் காணப் படுகிறது. நம் நாட்டின் மிகப் பெரிய தொழில் நிறுவனங்களை நிறுவிய தொழிலதிபர்கள் அடுத்து பொறுப்புகளை ஏற்க மகன், மருமகன், பேரன்கள் என்று இளைய தலைமுறையினர் வந்த பிறகும்கூட தலைமைப் பொறுப்பை விட்டுக்கொடுக்க முடியாமல் தவிக்கின்றனர்.

தன்னால் நிறுவனத்துக்கு இனி அதிகம் நன்மைகளைச் செய்துவிட முடியாது என்று தெரிந்தும்கூட, ஏற்கெனவே பழகிய வட்டங்களில் கிடைக்கும் மதிப்பு, மரியாதை, கௌரவத்துக்காகத் தொடரவே விரும்புகிறார்கள். இது உலக சமூகத்தின் அனைத்துத் தரப்புகளிலும் பரவியிருக்கிறது.

## அறிவுலகிலும்கூட ஆசை

அரசியல், விளையாட்டு, தொழில்துறை மட்டுமல்ல அறிவுலகிலும் இப்படி தலைமையை விட்டு இறங்க மனமில்லாத பற்று தொடர்கிறது. ‘எகனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி’ (இபிடபிள்யு) என்பது இந்திய அறிவாளிகளால் மிகவும் போற்றப்படும், சமூக ஆய்வுகள் தொடர்பான கட்டுரைகளைத் தொடர்ந்து பிரசுரிக்கும் வாரப் பத்திரிகை. பாம்பே நகரிலிருந்து வெளிவரும் இந்தச் சமூக அறிவியல் வாரப் பதிப்புக்கு,

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# பைடன். அதிகார ஆசையின் அடையாளம்

4ம் பக்க தொடர்ச்சி..........

சர்வேதச அரங்கில்கூட மதிப்பும் மரியாதையும் உண்டு.

இந்தப் பத்திரிகையில் தங்களுடைய கட்டுரை வெளியாக வேண்டும் என்று இந்திய அறிஞர்களும் வெளிநாட்டு இளம் அறிஞர்களும் போட்டிப் போடுவார்கள், அதேபோல அதில் வரும் கட்டுரைகள் அனைத்தையும் உடனுக்குடன் படித்துவிடவேண்டும்என்றும்துடிப்பார்கள். சமீப ஆண்டுகளாக இந்த வாரப் பத்திரிகை பொலிவிழந்து வருகிறது. இப்போது அதில் வரும் கட்டுரைகளில் ஏதாவதொன்று சில வேளைகளில் மட்டுமே கவனத்தை ஈர்க்கிறது. அறிவாளிகளிடையே விவாதங்களை மூட்டுவதில் முக்கியப் பங்கு வகித்த அந்தப் பத்திரிகை இப்போது களையிழந்து, ஆதரவும் குறைந்து தேய்ந்துவருகிறது.

இதற்கு முக்கிய காரணம் இந்தப் பத்திரிகையை நீண்ட காலமாக நடத்திவரும் அறக்கட்டளை நிர்வாகிகள் அனைவரும் இதில் ‘ஆயுள்கால’ உறுப்பினர்கள், அவர்களில் பலர் நீண்ட ஆயுளால் இதில் தொடர்கிறார்கள். அந்த அறக்கட்டளை உறுப்பினர்களிலேயே மிகவும் இளையவருக்கே வயது 67தான்; மிக மூத்தவருக்கு வயது 93! மொத்த உறுப்பினர்கள் பத்து பேரில் ஒன்பது பேர் ஆண்கள். அறக்கட்டளை உறுப்பினர்களின் சராசரி வயது எழுபது அல்ல எண்பது.

சமூக அறிவியல் துறைகளில் மிகச் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை தங்களுடைய முப்பதுகள் அல்லது நாற்பதுகளில்தான் அதிகம்பேர் எழுதுகின்றனர். இவ்வாறு கட்டுரைகளைத் தருவோரின் வயது இளமையாகவும், அதைத் தேர்வுசெய்கிறவர்கள் வயது மூப்பாகவும் இருந்தால் மிகச் சிறந்த ஆக்கங்கள் எப்படித் தேர்வுபெறும்? இத்தகைய பொருத்தமற்ற தேர்வால் அந்தப் பத்திரிகைதான் எப்படி வாசகர்களால் போற்றப்படும்?

## தேசிய உயிரியல் ஆய்வு மையம்

தனக்குத்தானே ஏற்படுத்திக்கொண்ட காயங்களால் ‘இபிடபிள்யு’ இப்படி மதிப்பிழந்ததற்கு மாறாக, பெங்களூருவில் உள்ள ‘உயிர்-அறிவியல் தேசிய ஆய்வு மையம்’ (என்சிபிஎஸ்) மிகத் துடிப்பாக இன்றளவும் செயல்படுகிறது. 1940களில் பம்பாயில் ‘டாடா அடிப்படை அறிவியல் ஆய்வுக் கழகம்’ (டிஐஎஃப்ஆர்) தொடங்கிய பிறகு பெங்களூருவில் தொடங்கப்பட்டதுதான் ‘என்சிபிஎஸ்’. அதன் முதல் பதினைந்தாண்டுகளில் இயற்பியல் - கணித அறிஞர்கள் நிறுவனத்தில் கோலோச்சினார்கள்.

1960களில் உபைத் சித்திகி என்ற இளம் உயிரியல் அறிஞர் இந்த நிறுவனத்துக்குத் தேர்வானார். வேறு ஆய்வு நிறுவனங்களில் இருபதாண்டுகள் சிறப்பாகப் பணியாற்றி பயிற்சி பெற்ற சித்திக், இந்த ஆய்வு நிறுவனத்துக்குப் புதிய சிந்தனைகளோடு புதிய தேடல்களோடு வந்தார்.

எனக்கு சமூக அறிவியல் பாடங்களில்தான் பயிற்சி அதிகம் என்றாலும் அறிவியல் அறிஞர்களுடன் நட்புடன் தொடர்கிறேன். என்னுடைய பெற்றோரில் ஒருவரும் மூதாதையரும் அறிவியலாளர்கள். ஆரம்ப காலத்தில் நானும் இந்திய அறிவியல் ஆய்வுக் கழகத்தில் படித்தேன். எனக்குத் தெரிந்து இந்திய ஆய்வுநிறுவனங்களிலேயே என்சிபிஎஸ்ஸில் மட்டுமே அதிகாரப் படிநிலையின் ஆதிக்கம் அல்லது வீச்சு குறைவு. இங்கே அறிஞர்கள் சுமுக உணர்வோடு எதையும் கலந்து விவாதிக்கும் வெளிப்படைத்தன்மை வாய்ந்தவர்கள்.

ஒன்றிய அரசின் அறிவியல் -தொழில்துறை ஆய்வுகளுக்கான 36 தேசிய ஆய்வகங்களில் இப்படியொரு சூழலைப் பார்ப்பது அரிது. மிகவும் பெரிதாகப் புகழப்படும் ஐஐடி போன்ற இந்தியத் தொழில்நுட்ப உயர்கல்விக்கூடங்களில்கூட டீன்களாகவும் இயக்குநர்களாகவும் இருக்கும் மூத்த ஆண்மக்கள், அவர்களுடைய ஆய்வுலக சகாக்களாலும் இயக்குநர்களாலும் மிகவும் மரியாதையாகவும் போற்றுதலுடனும் நடத்தப்படுகின்றனர். அந்த டீன்கள், இயக்குநர்களைவிட இளவயது ஆராய்ச்சியாளர்கள் நிறைய சாதனைகள் படைத்திருந்தாலும், சமமாகப் பழகுவதில்லை.

உபைத் சித்திகியைப் பலமுறை அருகிலிருந்து பார்த்திருக்கிறேன், நிறுவனத்தில் முழு ஜனநாயகத்தன்மையும் பங்கேற்பு மரபுகளும் வேரூன்ற அவருடைய பங்களிப்பு முக்கியமானது. அவர் பகட்டையோ, அதிகார வர்க்க செல்வாக்கையோ விரும்பியதில்லை. அறிவியல் ஆய்வுகளை மிகச் சிறப்பாக செய்பவர்கள் இளைஞர்களே என்பதை அறிந்திருந்தார். அவர்களுடைய திறமை வெளிப்பட உரிய இடத்தையும் ஊக்குவிப்புகளையும் அளித்தார். அவர்களையும் தன்னைப் போலவே ‘வார்க்க’ முயற்சிக்கவில்லை. அறிவியலுக்கு அப்பாற்பட்ட உலகிலும் நடப்பவற்றை அறியும் ஆர்வம் அவருக்கிருந்தது. எனவே மெய்யியலாளர்கள், வரலாற்று அறிஞர்கள், சமூக அறிவியலாளர்களுடன் உரையாடி கருத்துகளைப் பகிர்ந்துகொள்வார்.

இயக்குநராக பதவி வகித்த காலம் முடிந்தவுடன், அதிகார மையத்தை (பதவி நீட்டிப்புக்காக) வட்டமடித்துக் கொண்டிருக்கவில்லை சித்திகி. பொறுப்பை தன்னைவிட வயதில் இளையவரிடம் ஒப்படைத்துவிட்டு, தான் மேற்கொண்டிருந்த ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்தார். அவருக்குப் பிறகு இரண்டாவதாக வந்த இயக்குநர் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த மிகச் சிறந்த அறிவியலாளரிடம் பொறுப்பை அதேபோல ஒப்படைத்தார். நான்காவதாக இந்தப் பதவிக்கு வந்துள்ள இயக்குநர், என்சிபிஎஸ் அமைப்பில் இருந்ததே இல்லை. புதிய எண்ணங்கள் - அனுபவங்களோடு தலைமைக்கு வந்திருக்கிறார்.

## பைடனும் சித்திக்கும்

வழக்கமான இந்தியர்களைப்போல சித்திகி இருந்திருந்தால், என்சிபிஎஸ் இந்த அளவுக்குத் துடிப்பும் வளர்ச்சியும் பெற்றிருக்காது.

நிறுவன வெற்றிக்கு இன்னொரு முக்கிய காரணம் - அதன் கட்டமைப்பு. நிறுவன இயக்குநர் அன்றாடப் பொறுப்புகளைக் கவனித்துக்கொள்வார். அவருக்கும் மேல், வழிகாட்டவும் தீர்மானிக்கவும் 15 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக வாரியம் இருக்கிறது. அதில் ஐந்து பேர் இந்திய அரசின் வெவ்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் - பதவி வழி உறுப்பினர்கள் (எக்ஸ் அஃபிஷியோ), டாடா அடிப்படை அறிவியல் ஆய்வு மையம் போன்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள்; எஞ்சிய பத்து பேரும் அறிவியலாளர்கள், அவர்களில் ஐந்து பேர் பெண்கள்.

என்சிபிஎஸ் வாரிய உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள். ஓரிரு முறை மட்டுமே நீட்டிப்பு இருக்கும், நிரந்தரமாகவோ, நீண்ட காலமாகவோ இருந்துவிட முடியாது. இபிடபிள்யுவைப் போல இங்கே ஆயுள்கால உறுப்பினர்கள் இல்லை. என்சிபிஎஸ்ஸில் அதிகபட்சம் 9 ஆண்டுகள்தான் உறுப்பினராக இருக்க முடியும். ‘இபிடபிள்யு’வில் முப்பதாண்டுகளுக்கும் மேலாக உறுப்பினர்களாகத் தொடர்கின்றனர்.

சக்திவாய்ந்த பெண்கள் - செல்வாக்கு மிக்க பெண்களும் உயர் பதவிக்கு வந்தால் இந்த மனப்போக்குக்கு விதிவிலக்கு அல்ல என்றாலும், ஆடவர்களிடம் இது அதிகமாகவே இருக்கிறது. இதில் உபைத் சித்திகி விதிவிலக்கு.

அரசியல், விளையாட்டு, தொழில், சமூக அமைப்புகள், கல்வி அமைப்புகள் ஆகியவற்றில் ஏராளமானவர்கள் ஜோ பைடனைப் போலத்தான் முதுமையும் தளர்வும் வந்த பிறகும் பதவியை விட்டுக்கொடுக்காமல் நீடிக்கவே விரும்புகின்றனர். அவர்களுடைய இந்தக் குறுகிய பார்வையுள்ள சுயநல நோக்கத்தால் திறமை வாய்ந்த அவர்களுடைய இளம் தோழர்களும் சமூகமும் ஒட்டுமொத்தமாக இழப்புகளைத் தாங்க நேர்கிறது.

(நன்றி: அருஞ்சொல்)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சட்டவிரோத மது, கோடாவுடன் பேலியகொடையில் கைதுகள்

பேலியகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வராகொட பகுதியில் சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடா ஆகிய பொருளகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கடந்த 31 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக சபுகஸ்கந்த பொலிஸார் தெரிவித் தனர்.

சபுகஸ்கந்தபொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

பேலியகொடை மற்றும் விதுலிபுரபகுதியில்வசிக்கும்45 மற்றும்43வயதுடையஇருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 33 லீற்றர் 750 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம், 4,860 லீற்றர் கோடா, 5 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் 3 எரிவாயு அடுப்புகள் ஆகிய பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளதாக சபுகஸ்கந்த பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# 20 கி. கஞ்சாவுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் கஞ்சா போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவர் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். வளைவுக்கு அருகில் இளைஞன் ஒருவர் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்படுவதாக பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக் கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில்இளைஞனைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன்வவுனியாபகுதியை சேர்ந்தவர் என்பதுடன் இவரிடமிருந்து 20 கிலோ 175 கிராம் கஞ்சா போதை பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட கஞ்சா போதைப் பொருளை, கைது செய்யப்பட்ட இளைஞனையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காகயாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் அதிரடி படையினர் ஒப்படைத் துள்ளனர்.(05)

# சர்வதே அரை மரதன் ஓட்டம் அறுகம்பேயில் ஓகஸ்ட் 18இல்






(பாறுக் ஷிஹான்)

அறுகம்பே அபிவிருத்தி போரம் ஏற்பாடு செய்துள்ள அறுகம்பே சர்வதேச அரை மரதன் ஓட்டப்போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை



இடம்பெறவுள்ளதாகவும், அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன எனவும் போரத்தின் தலைவரும், இயன்மருத்துவருமான இஸட்.எம்.ஹாஜித் தெரிவித்தார்.

அறுகம்பே சர்வதேச அரை மரதன் ஓட்டப்போட்டி தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு வியாழன் மாலை அறுகம்பே உல்லாச விடுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கன்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உலகில் இடம்பெற்றுவரும் பிரசித்திபெற்ற மரதன் ஓட்டப்போட்டிகளில் அறுகம்பே அரை மரதன் போட்டியும் இடம்பிடிக்க வேண்டும் எனும் நோக்கில், அறுகம்பே மரதன் ஓட்டப்போட்டியினை நடத்தி வருகின்றோம். இம்முறை 6 ஆவது தடவையாகவும் குறித்த மரதன் ஓட்டப்போட்டியை மிகவும் சிறப்பாக நடத்தவுள்ளோம். அறுகம்பே அரை மரதன் ஓட்டப் போட்டியானது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தற்போது உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அறுகம்பை பிரதேசத்தை நோக்கி அதிகரித்துக் காணப்படுகிறது. இக்காலகட்டத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலும், சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டும் இம்மரதன் ஓட்டப் போட்டியினை சர்வதேச தரத்தில் நடத்துவதற்குரிய ஒழுங்குகளை செய்துள்ளோம்.

இப்போட்டியில் உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் என 200பேர் பங்கேற்கவுள்ளனர். இதில் 150 உள்நாட்டு வீரர்களும் 50 வெளிநாட்டு வீரர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இதில் பிரதேச மரதன் ஓட்ட வீரர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த போட்டி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வெற்றிபெறும் வீரர்களுக்கு பெறுமதியான பரிசில்களும், சான்றுதழ்களும் வழங்கவுள்ளோம்.

இந்த மரதன் போட்டியானது 21.1 கிலோமீற்றர், 10கிலோமீற்றர், 5 கிலோமீற்றர் என 3பிரிவுகளாக நடைபெறவுள்ளது. 21.1கிலோமீற்றர் பிரிவில் 17வயதுக்கு மேற்பட்டவர்களும் 10கிலோமீற்றர் பிரிவில் 17 வயதுக்கு மேற்பட்டவர்களும் 5கிலோமீற்றர் பிரிவில் 12- 17 வயதையுடைய சிறுவர்களும் பங்குபற்ற முடியும்.

இந்நிகழ்வில் போரத்தின் பிரதி தலைவர் எம்.எஸ்.அப்துல் நாசர், பொதுச்செயலாளர் எம்.எச்.சுபுஹான் உள்ளிட்ட போரத்தின் உயர்பீட உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.(05)



## தாளையடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோடியைச் சந்தித்து பேசிய போது எட்டப்பட்ட உடன்பாடுகளை கைசாத்திடும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்திச் செயற்பாடுகளுக்காக அமுல், கார்கில்ஸ் நிறுவனங்களுடன் ஆலோசிக்கிறோம். தற்போது நாட்டுக்குள் பண புழக்கம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் இதனை தக்க வைத்துக்கொள்ளவேண்டும். நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் வேளையில், யாழ்ப்பாணமும் பொருளாதாரத்தின் முக்கிய பகுதியாக மாறும்.

இந்த திட்டத்தை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டமைக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு நன்றி. தோஜுட்டப் பகுதிகளை கிராமங்களாக பிரகடனப்படுத்தும் பணிகளையும் அவரோடு இணைந்து முன்னெடுப்போம். எதிர்காலத்தில் இவ்வாறான பல பணிகளை செய்யவுள்ளோம்'. என்றார்.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களமிறக்கும் தீர்மானம் கட்சி உறுப்பினர்களின் முழுமையான ஆதரவுடன் எடுக்கப்பட்டது. அந்தத் தீர்மானம் இனி மாற்றம் பெறாது.எமது வேட்பாளரே வெற்றி பெறுவார்.

மாறுபட்ட அரசியல் கொள்கையுடைய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். நாடாளுமன்றத்தின் ஊடாக அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம். இருப்பினும் அவர் எமக்கு உண்மையாக இருக்கவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் குறித்து கட்சியின் தலைவர்களுடன் பேச்சு நடத்திக்கொண்டு கட்சி உறுப்பினர்களுடனும் தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்தினார். கட்சியைப் பலவீனப்படுத்தும் வகையில் செயற்பட்டார்.

பொது ஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்து பயணிக்கும் சூழலை ஜனாதிபதியே இல்லாதொழித்தார். கட்சியின் கொள்கைக்கு எதிராக ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்துள்ளவர்கள் வெகுவிரைவில் மீண்டும் எம்முடன் இணைவார்கள் என்றார்.

## 6 அமெ. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றன.

மீண்டெழும் தன்மையுடைய, செழிப்பான ஒரு இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை பேணிப் பாதுகாப்பதில் அமெரிக்கா கொண்டுள்ள உறுதியான நிலைப்பாடு மற்றும் அனர்த்தங்களுக்கான பதிலளிப்பு நடவடிக்கைகளில் சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவம் ஆகியவற்றினை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நடைபெறும் இப்பயிற்சியில் இலங்கை மற்றும் மாலைதீவினைச் சேர்ந்த தமது எதிரிணைகளுடன் 70க்கும் மேற்பட்ட அமெரிக்க அதிகாரிகளும் இரண்டு ஸீ--130 ஹெர்குலஸ் விமானங்களும் பங்கேற்கின்றன.

நகர்ப்புற மற்றும் மருத்துவ தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப்பணி ஆகியவற்றுடன் விமான ஓடுதள பழுதுபார்ப்பு உட்பட ஆறு வகையான பயிற்சிகளை உள்ளடக்கிய அட்லஸ் ஏஞ்சல் பயிற்சியானது இறுதியாக ஒகஸ்ட் 9 இடம்பெறும் ஒரு நெருக்கடி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியுடன் நிறைவடையும்.

இப்பயிற்சியில் பங்குபற்றுவோர் உண்மையான பேரிடல்களுக்கு முகங்கொடுப்பதற்குத் தயார்நிலையில் இருப்பதை உறுதி செய்யும் வகையில், பல்வேறு சூழ்நிலைகளின் போது பதிலளிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திறன்களைப் பரிசீலனை செய்வதற்காகவும் அவற்றை மேம்படுத்துவதற்காகவும் இப்பயிற்சிகள் வடிவமைக்கப் பட்டுள்ளன.

பிரதான பயிற்சியினைத் தொடர்ந்து, கொழும்பிலுள்ள கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் இலங்கை இராணுவ மற்றும் சிவிலியன் மருத்துவ அலுவலர்களுடன் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ளும் ஓர் அறிவுப் பரிமாற்ற அமர்வில் அமெரிக்க விமானப் படையினைச் சேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்கள் கலந்துகொள்வர்.

பேரிடர்களுக்கு பதிலளிப்பதற்கான ஒத்துழைப்பினை பாராட்டிய அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங், ''பேரிடர்களுக்கு எல்லைகள் எதுவும் கிடையாது மற்றும் உலகம் முழுவதும் ஏற்படும் பேரிடர்களின் எண்ணிக்கையும், அவற்றின் தீவிரமும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. சேதத்தைகுறைப்பதற்கும், உயிர்கள் மற்றும் வாழ்வாதாரங்களை பாதுகாப்பதற்கும், பிராந்தியத்தில் மீண்டெழும் தன்மை மற்றும் செழிப்பினைப் பேணிவளர்ப்பதற்கும் சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, பேரிடர்களை எதிர்கொள்வதற்கான தயார்நிலையினை மேம்படுத்துவதில் அமெரிக்கா உறுதியுடன் இருக்கிறது.

அட்லஸ் ஏஞ்சல் போன்ற செயன்முறைப் பயிற்சிகள் ஊடாக எங்கள் நிபுணத்துவத்தை பகிர்ந்துகொள்வதன் மூலம் பேரிடர்கள் ஏற்படும்போது விரைவாகவும் செயற்திறனுடனும் பதிலளிப்பதற்கான சமூகங்களின் திறனை நாம் பலப்படுத்துகிறோம்" எனத் தெரிவித்தார்.

''அட்லஸ் ஏஞ்சல்' என்பது மொன்டானா மாநில பங்காண்மை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் முக்கிய ஒருங்கிணைந்த பயிற்சிகளுள் ஒன்றாகும். மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப்பணிகள் என்பன தொடர்பான மூலோபாய தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றை விருத்தி செய்து பிராந்தியத்தில் கூட்டுப் பாதுகாப்பிற்காக ஒன்றிணைந்து பணியாற்றும் தன்மையை ஊக்குவிக்கும் வகையில், விடயம் தொடர்பான நிபுணத்துவ பரிமாற்றங்கள் ஊடாக இலங்கை விமானப்படை மற்றும் மொன்டானா தேசிய காவல் படை ஆகியவற்றுக்கிடையே அதிக ஈடுபாட்டுக்கான ஒரு சந்தர்ப்பத்தினை இப்பயிற்சி வழங்குகிறது'' என இலங்கை விமானப்படையின் கட்டளைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச கூறினார்.

பேரிடர்களை முகாமை செய்வதில் அது தொடர்பான பயிற்சிகளின் முக்கியத்துவத்தினை வலியுறுத்திய மொன்டான தேசிய காவல் படையைச் சேர்ந்த துணைத் தளபதி பீற் ரோனெக் மேலும் தெரிவித்ததாவது:

செயற்திறனுடைய பேரிடர் முகாமைத்துவமானது முதலில் பதிலளிப்பவர்கள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் சமூக உறுப்பினர்களுக்கு நெருக்கடி நிலைமைகளின்போது தீர்க்கமாகச் செயற்படுவதற்குத் தேவையான திறன்கள் மற்றும் அறிவை வழங்கும் மிக வலிமையான பயிற்சியில் தங்கியுள்ளது. ஒரு அவசரநிலை ஏற்பட்டால் செயற்படுவதற்கு நாம் அனைவரும் தயாராக இருப்பதை உறுதிசெய்யும் வகையில் இந்த வாரம் முழுவதும், பிராந்தியத்திலுள்ள எமது எதிரிணை சகாக்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும், உருவகப்படுத்தப்பட்ட உண்மையான சூழ்நிலைகளை நாம் எதிர்கொள்ளும்போது, அவர்களின் நிபுணத்துவத்திலிருந்து கற்றுக்கொள்வதற்கும் நான் ஆவலுடன் காத்திருக்கிறேன் எனத் தெரிவித்தார்.

## வடக்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குடிதண்ணீர் அடிப்படை உரிமையாகும். அதை மக்களுக்கு வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, செலவு அதிகமாக இருந்ததால் சிக்கல் ஏற்பட்டது. ஆனால் மக்களின் குடிதண்ணீர்த் தேவையை உறுதிப்படுத்த இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டோம். ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்றபோது வடக்கில் குடிதண்ணீர் விநியோகம் 4% ஆகக் காணப்பட்டது. இன்று முதல் இது 40% ஆக உயர்வடையும். இந்த திட்டத்திற்கு பல கிராமங்கள் காணிகளை கொடுக்க விரும்பவில்லை. இந்த காணியை வழங்கிய தாளையடி கிராம மக்களுக்கு நன்றி என்றார்.

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணி சார்பில் எஸ்.கே. பண்டாரநாயக்கவும், தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் விஜயதாஸ ராஜபக்ஷவும், ஐக்கிய சோஷலிச கட்சி சார்பில் சிறிதுங்க ஜயசூரியவும், புதிய சீஹல உருமய கட்சி சார்பில் சரத் மனமேந்திரவும், ஜனசேனா முன்னணி சார்பில் பத்தரமுல்லே சீலரத்ன தேரரும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அதேவேளை அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி என்ற பிரிவில் றுஓஹணு மக்கள் முன்னணி சார்பில் அஜந்த த சொய்சா கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

சுயேச்சையாக போட்டியிடும் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்தி ரத்ன, கே.கே.பியதாஸ, ஆனந்த குலரத்ன, அக்மீமன தயாரத்ன தேரர் ஆகியோர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இவர்களில் ஆனந்த குலரத்ன, சரத் மனமேந்திர, பத்தரமுல்லே சீலரத்ன தேரர், அக்மீமன தயாரத்ன தேரர் ஆகியோர் நேற்று வெள்ளிக்கிழமை கட்டுப்பணம் செலுத்தினர் என்று ஆணைக்குழு அறிவித்துள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு மட்டக்களப்பில் நேற்று தொடங்கியது

### இந்தியா, ஜெர்மனியில் இருந்து பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் பங்கேற்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பங்களிப்புடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு நேற்று (வெள்ளிக்கிழமை) மட்டக்களப்பில் ஆரம்பமானது.

உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு இன்றும் மட்டக்களப்பில் இடம்பெறும்.

இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக கல்லடியில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையை ஆளுநர் செந்தில் தொண்டமான், மலேசியா நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ சரவணன் ஆகியோர் திறந்துவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்து 1000 இற்கும் மேற்பட்ட தமிழ் கலைஞர்களின் பங்குபற்றலுடன் ஊர்தி பவனி மற்றும் கலை நிகழ்வுகளுடன் வெபர் மைதானத்தை நோக்கி விழாவில் பங்குபற்றுவோரும், பொது மக்களும் நடைபவணியாக வந்தடைந்தனர்.

வெபர் மைதானத்தில் இலங்கை, இந்தியா மற்றும் ஜெர்மனியை சேர்ந்த பேராசிரியர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், தமிழ் கலைஞர்களின் வருகையுடன் மங்கள விளக்கேற்றப்பட்டு கலைவிழா ஆரம்பமானது.

விழாவில் இலங்கை அஞ்சல் திணைக்களத்தால் உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு இலங்கையில் நடைபெற்றதை நினைவூட்டும் முத்திரையும் வெளியிடப்பட்டு அதன் முதல் பிரதி ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மலேசியா நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ சரவணன் அவர்களுக்கும் ஏனைய அழைப்பாளர்களுக்கும் முத்திரை வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன், இந்நிகழ்வு தொடர்பான விசேட மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

ஆரம்ப நிகழ்வுகளை தொடர்ந்து கருத்தரங்குகள் இடம்பெற்றது முதல் நாளுக்கான தமிழ் கலை விழா நிகழ்வுகள் நிறைவடைந்தன.

இரண்டாம் நாளுக்கான கலை நிகழ்வுகளும் கருத்தரங்குகளும் இன்று (சனிக்கிழமை) கிழக்கு பல்கலை கழகத்தில் இடம்பெற உள்ளமை குறிப்பிடத் தக்கது. (05)

# இலங்கையர்களைப் பாதுகாப்பாக அழைத்து வர ஐந்து மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன

### அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



தற்போது மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை காரணமாக இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் நாடு திரும்பும் கட்டாய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஈரானில் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவின் தலைவர் இஸ்மாயில் ஹனியா படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அதிகரித்து வரும் யுத்த சூழ்நிலை குறித்து நேற்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் ஊடகவியாளர் சந்திப்பு நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் -

ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் இஸ்ரேல், லெபனான், ஜோர்டான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் உள்ள இலங்கை தொழிலாளர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வருவதற்காக 5 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கில் நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டுப் நிலை ஏற்படாமல் இருக்க, பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்

இஸ்ரேலில் மாத்திரம் 12,000க்கும் அதிகமான இலங்கைத் தொழிலாளர்கள், ஜோர்தானில் 15,000, லெபனானில் 7,500, எகிப்தில் கிட்டத்தட்ட 500 பேயர் மோதல் வலயத்தில் பெருமளவிலான இலங்கையர்கள் பணியாற்றுவதாக அமைச்சர் கூறினார். ஆபத்தான வகையில் எல்லைகளை கடக்காமல் பாதுகாப்பான முறையில் செயற்படுமாறு இலங்கை தொழிலாளர்களை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

தேவை ஏற்படும் பட்சத்தில் தொழிலாளர்களை கடல் அல்லது விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறே , சவூதி அரேபியா, குவைத் மற்றும் பிற நாடுகளில் உள்ள இலங்கைத் தொழிலாளர்களும் இந்த நிலைமையால் வேலைவாய்ப்பை இழக்கும் அபாயத்தை எதிர்கொள்கின்றனர். தேவைப்படும் போது அவர்களை தாய் நாட்டிற்கு அழைத்து வரவும், அதுவரை பாதுகாப்பான தங்குமிட வசதிகளை வழங்கவும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது .

எனவே நாடுதிரும்பும் தொழிலாளர்களுக்கு உரிய வசதிகளை செய்து கொடுப்பட்டு சமூகமயமாக்கப் படுவார்கள் என அமைச்சர் தெரிவித்தார். (05-113)

காலைக்கதிர் Kalaikkathir

## முள்ளியவளையில் யானை மர்மச் சாவு



முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஐங்கன்குளம் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் யானையின் சடலம் ஒன்று நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஐங்கன்குளம் பகுதியில் யானையின் சடலம் இருப்பதாக விவசாயிகள் அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்தே குறித்த யானையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த யானையின் இறப்புக்கான காரணம் இதுவரை தெரியவவில்லை.

யானையின் இறப்பு தொடர்பில், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறித்த யானையின் மரணம் தொடர்பான காரணத்தை மருத்துவ பரிசோதனையின் பின்னரே அறிய முடியும் என தெரிவித்துள்ளனர். (05)

## யாழ் வாள் வெட்டு; சந்தேகநபர் கைது

### ஒரு வருடத்தின் பின்னர்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவம் ஒன்றின் பிரதான சந்தேக நபர் சுமார் ஒருவருட கால பகுதிக்கு பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜீன் மாத கால பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் பிரதானசந்தேகநபர் தலைமறைவாகி இருந்தார்.

இந்நிலையில் வியாழக்கிழமை சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (05)

## கசிப்புடன் இருவர் கைது

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 26 ஆயிரத்து 51 மில்லி லீட்டர் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சேனையூர் மற்றும் சந்தோஷபுரம் பிரதேசங்களில் கசப்பு உற்பத்தியில் ஈடுபட்டு அதனை வியாபாரம் செய்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் சேனையூர் ஆறு சம்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதான ஆண் ஒருவரும் 51 வயதான பெண் ஒருவரும் அடங்குவர்.

கைது செய்யப்பட்ட இரு நபர்களையும் கைப்பற்றப் பட்ட கசிப்பையும் நேற்று (வெள்ளிக்கிழமை) மூதூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர். (05)




காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் சுத்தமான குடிதண்ணீரை பெறமுடியாது 35 லட்சம் பேர் அவதி

நாட்டின் சனத்தொகையில் சுத்தமான குடிநீரை தொடர்ச்சியாக பெற முடியாத நிலையில் சுமார் 67 சதவீதமானவர்கள்உள்ளதாகபேராதனைபல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் பேராசிரியர் பி.பி.ஏ. வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

நாட்டின் 25 மாவட்டங்களிலுள்ள நகர்ப்புற, கிராமப்புற மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளை உள்ளடக்கிய 3,210 வீட்டுத் தொகுதிகளின் மாதிரிகளைப் பயன்படுத்தி இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

அதன்படி, குடிநீரின் தரம் குறித்து மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு மற்றும் யுனிசெப் ஆகியன இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டன.

அதனடிப்படையில், சுமார் 35 இலட்சம் பேர் சுத்தமான குடிநீரை தொடர்ச்சியாக பெற முடியாத நிலையில் உள்ளமை தெரியவந்துள்ளது.

எனவே, நீர் சுத்திகரிப்பு விநியோகம் மற்றும் நீர் சுத்திகரிப்பு முறைகளை மேம்படுத்துவதற்கான வசதிகள் நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களிலுள்ள மக்களின் தேவையாகவுள்ளதாக பேராசிரியர் தெரிவித்துள்ளார். (05)

# வறுமை என்கின்ற இருளை அகற்றுகின்ற ஒளி கல்வி

## சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தெரிவிப்பு



(சர்ஜுன் லாபீர்)

கல்வி என்பது வறுமை என்கின்ற இருளை அகற்றுகின்ற ஒளியாகும் என சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் க.பொ.த(உ.ஃத) எழுதிய மாணவர்களுக்கான 03 மாத கால விஸ்டாதொழில் வழிகாட்டல் பயிற்சிப் பட்டறையை நிறைவு செய்த மாணவர்களுக்கு கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் -

இன்றுநாம்வறுமைஎன்றுபேசிக்கொள்கின்றோம் அதன் மூலமாகத்தான் பொருளாதார சிக்கல்கள் சமூகத்திலேஎழுகின்றன. சிலபிறழ்வானநடத்தைகள் மேலோங்குகின்றன. குற்றத்தை செய்கின்ற மனப்பாங்கு அதிகரிக்கின்றது. சட்டங்களுக்கு கட்டுப்படாத சமூகம் என்றெல்லாம் நாங்கள் வறுமைய காரணமாக காட்டி அதன் விளைவுகளாக பேசிக்கொள்கின்றோம்.

எனவே நாம் வறுமையில் இருந்து மீள்வதாக இருந்தால் அதற்கான ஒரேயொரு வழி கல்வியை மட்டும் குறிப்பிட முடியும். கல்வி மேம்பாட்டின் மூலமாக வறுமையை நிரந்தரமாக நீக்க முடியும்.

வேறு செயற்பாடுகளும், அபிவிருத்திகளும் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் தாக்கு பிடிக்குமே ஒளிய கல்வியை போன்று நீடித்து நிலைத்து நிற்க முடியாது.

கல்வி என்பது நாம் எல்லோரும் குறிப்பிடுவது போல வறுமை என்கின்ற இருளை அகற்றுகின்ற ஒளி ஆகும். சூரியன் உதிக்கின்ற போது எவ்வாறு இருள் மெல்லமெல்ல விலகுகின்றதோ அது போல கல்வி மேம்படுகின்ற போது குறித்த சமூகத்தில், பிராந்தியத்தில், நாட்டில் இருந்து வறுமையானது ஒழிந்து போகும்.

எமது பிரதேசம் விவசாயத்தை அடிப்படையாக கொண்டு இருப்பதனால் நமது பெற்றோர்கள் விவசாயத்தை பிரதான தொழிலாக மேற் கொண்டதனால் ஏற்படுகின்ற கஸ்டங்களை நாம் அனுபவித்து இருக்கின்றோம்.

எனவேநமதுதொழில்முயற்சிகள்அனைத்தையும் நவீன காலத்திற்கு ஏற்றாற்போல ஸ்மார்டாக மாற்றம் செய்ய வேண்டும்.

எமது பிராந்தியத்தில் எதிர்காலத்தில் நிலவளமோ, நீர்வளமோ அதிகரிக்க போவதில்லை. வளங்கள் குறைந்து கொண்டு சொல்லும்.

ஆனால் எமது நாடு பொருளாதார ரீதியாக பல்வேறுபட்ட சிரமங்களுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அரசாங்கம் கல்விச் செயற்பாடுகளுக்கு எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்தாமல் நுட்பமாக கையாளுகின்றது.

எமக்குகிடைக்கின்றவளங்களைவைத்துஉயர்தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்கி அபிவிருத்தியை அடைய வேண்டும் வேண்டும்.

மாணவபருவத்தை வீணடிக்காமல் முறையான வழிகாட்டல்களோடு பயனிக்கின்ற போது எதிர்காலத்தை வெற்றிகரமாக அனுபவிக்க முடியும். அதுபோல் எமது குடும்பங்களில் இருக்கின்ற வறுமையை நீக்க முடியும். எமது பிராந்தியத்திலே தேவைப்படுகின்ற தலைமைத்துவத்தையும், ஆளுமைகளையும் வழங்க முடியும் மற்றும் எங்களது எதிர்கால சந்ததிகளை ஆளுமையுள்ள சந்ததிகளாக வளர்த்தெடுக்க முடியும் என்ற விடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (05)

# இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் அநுரகுமார திசாநாயக்க சந்திப்பு

மக்கள் விடுதலை முன்னணி பிரதான அலுவலகத்தில் வியாழக் கிழமை பிற்பகல் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் துமிந்த ஹுலங்கமுவ உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இலங்கை வர்த்தக சம்மேள னத்தினால் உருவாக்கப்பட்டுள்ள 'ஐந்து வருட பொருளாதார திட்டம்' வெளியீட்டுப் பிரதியும் இதன்போது அநுரவிடம் கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உப தலைவர் கிறிஷான் பாலேந்திர, பிரதி உப தலைவர் பிங்குமால் தெவரதந்திரி மற்றும் பணிப்பாளர் சபை பிரதிநிதிகளான அமல் கப்ரால், சரத் கனேகொட, சுபுன் வீரசிங்க, வினோத் ஹய்ட்ராமணீ உள்ளிட்ட முக்கியஸ்தவர்களும் தேசிய மக்கள் சக்தியின்தேசியநிறைவேற்றுப்பேரவை உறுப்பினர்களான பேராசிரியர் அனில் ஜயந்த மற்றும் பேராசிரியர் ஹர்ஷன சூரியப்பெரும ஆகிய தோழர்களும் கலந்துகொண்டனர்.(05)

# நாட்டில் டெங்கு காய்ச்சலால் இதுவரை 14 பேர் உயிரிழப்பு

நாட்டில்இதுவரைடெங்குகாய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்வடைந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 32 ஆயிரத்து 866 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கடந்தமாதம் சுமார் 4,506 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதோடு, வியாழக்கிழமை முதலாம் திகதி மாத்திரம் 121 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். அனைத்து மாவட்டங்களிலும் பதிவாகக்கூடிய டெங்கு நோயாளர்களின் வீதம் சடுதியாக அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

டெங்கு பரவலைக் கருத்திற் கொண்டு 22 சுகாதார மருத்துவ அதிகாரப் பிரிவுகள் அதி உயர் டெங்கு அபாயம் மிக்க பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு டெங்கு காய்ச்சலால் நேற்று முன்தினம் மேலும் ஓர் உயிரிழப்பு பதிவாகியுள்ளதுடன், உயிரிழந்தவர்களின்எண்ணிக்கையும் 14 ஆக உயர்வடைந்துள்ளது.

எதிர்வரும் தினங்களில் பதிவாகக் கூடிய டெங்கு நோயாளர்களின் வீதம் மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.

கொழும்பு, கம்பஹா, கண்டி, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் தொடர்ச்சியான அதிகரிப்பைக் காணக் கூடியதாக உள்ளது.

பொதுமக்கள் டெங்கு அபாயத்தை கருத்திற்கொண்டுதாம்வாழும்சூழலில் டெங்கு நுளம்புகள் பெருக்கக்கூடிய பகுதிகளை இனங்கண்டு அவற்றை இல்லாதொழித்து தூய்மையாகவைத்துக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (05)

# கல்வி, பொருளாதார, சமூக விருத்திக்கு துணைநிற்பேன்

## நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் உறுதி



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் கல்வி சமூக மேம்பாடு, பொருளாதார ரீதியான முன்னேற்றத்தை கொண்டு செல்ல மக்களுக்காக என்றும் துணை நிற்பேன் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள திரியாய் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு மற்றும் கௌரவிப்புநிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

நாடாளுமன்றம் இன்னும் சில காலங்களில் கலைக்கப்படலாம் எதிர்வரும் 2025 இல் ஆவணியுடன்கலைக்கப்பட்டுவிடும். நாங்கள் கற்கும் காலங்களில் மின்சாரம் இருக்கவில்லை அப்போது எனது தந்தையாழ்ப்பாணத்துக்குகல்விகற்பதற்காக அனுப்புவதாக இருந்த போதிலும் அங்கு செல்லாமல் இங்கு கற்று முதல் பல்கலைக்கழகம் சென்றேன்.. 2கோடி ரூபாவை அபிவிருத்தி பணிக்காக பெற்றுள்ளேன். திரியாய் மாத்திரம் அல்ல தென்னை மர வாடி தொடக்கம் வெருகல் வரை அபிவிருத்தி பணிகளை செய்து மாவட்டத்தை முன்னுக்கு கொண்டு வருவேன் என்னாலான சகல உதவிகளும் செய்வதற்கான தயார் நிலையில் உள்ளேன். - என்றார்.(05)

# திருமலை மாவட்ட எம்.பி. குகதாசனுக்கு அமோக வரவேற்புடன் கௌரவிப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் அவர்களின் கௌரவிப்பு நிகழ்வானது திரியாய் தமிழ் மஹா வித்தியாலயத்தில் திரியாய், கட்டுகுளம், கல்லம்பத்தை, செந்தூர் ஆகிய ஊர் மக்களால் நேற்று (வெள்ளிக்கிழமை) ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இந்தநிகழ்வில்பாடசாலைமுதல்வர், இலங்கைத் தமிழரசுக் கட்சி மாவட்டக் கிளை உறுப்பினர், திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்க உறுப்பினர், ஊர் பொதுமக்கள், நலன்விரும்பிகள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், என பெருந்திரளானவர் பங்கு பெற்றனர்.

இந்த நிகழ்வு மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தன் ஐயாவின் நினைவேந்தலுடன் ஆரம்பமானது. தொடர்ந்து மங்கள விலக்கேற்றல், வரவேற்பு நடனம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (05)

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.08.2024இல் வெளியிடப்பெற்றது